
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1223

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

118

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




ஓவியம் : சிகரன்

## மெனக்கெடலுக்குப் பெயர்போனவர்கள், தி.மு.கழகத்தினர்!

தென்னாற்காடு மாவட்டத் தி.மு. கழகத்தின் 3-வது மாநாடு, 1958-ஆம் ஆண்டு ஜூன் 7, 8 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. முந்தைய நாள் மாலையில் இருந்தே மக்கள் ரயில், பேருந்து, சைக்கிள், மாட்டுவண்டிகளில் விருத்தாசலம் நோக்கி வரத் தொடங்கிவிட்டனர். முதல் நாள் 9 மணிக்கு பயணியர் விடுதியில் இருந்து பேரணி தொடங்கியது. எத்தனை மெனக்கெடலுடன் தி.மு.கழகத்தினர் தயாரா வார்கள் என்பதை உணர்த்திய மாநாடு இது. அன்னப்பறவை போல அலங்கரிக்கப் பட்டிருந்த ரதத்தில் மாநாட்டுத் தலைவர் எஸ்.முத்து உள்பட முன்னணித் தலைவர்கள் அமர்ந்திருந்தனர். 43 ஜோடி காளைகள் ரதத்தில் பூட்டப்பட்டிருந்தன. பாண்டு வாத்தியம், நாகசுரம், தாரை, தப்பட்டை, உறுமி மேளம் முழங்க ஊர்வலம் சென்றது. ஊர்வலத்தின் முன்னே யானை செல்ல, அதன் பின் குதிரை மீது கழகத்தின் இரு வண்ணக்கொடியை ஏந்தியவாறு, வீரர் ஒருவர் வந்தார்.

பின்னால், வட்ட வாரியாக கழகத் தோழர்கள் அணிவகுத்தனர். திருக்கோயிலூர் கழகத்தினர், யானையை அலங்கரித்து அழைத்துவந்தனர். குறிஞ்சிப்பாடி கழகத்தினர், சேர - சோழ - பாண்டியர் வேடமணிந்து வர, அவர்களுக்கு முன்னால் கனக விசயர் கல் சுமந்த காட்சியைச் சித்தரித்தனர். நெல்லிக்குப்பம் கழகத்தினரோ வண்டிமீது சிறைச்சாலை ஒன்றை வடிவமைத்து, அதன் மேலே கழகத்தினர் காயம்பட்டு இருப்பதைப் போல வடிவமைத்து வந்தனர். 'ஜனவரி 6-இல் காமராஜர் தந்த பரிசு' என்றும் அதை விளக்கியிருந்தனர். பண்ருட்டி கழகத்தின் பேரறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் படங்களுடன் அழகாக வடிவமைக்கப்பட்டிருந்த ரதத்தை எடுத்து வந்தனர். திண்டிவனம் தோழர்களோ டெல்லி, அசோகா ஓட்டல் போல ஒன்றை வடிவமைத்திருந்தனர். அதில் நேரு உணவு பரிமாறும் காட்சி இருந்தது. அது வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பதை உணர்த்தியது. வடநாட்டார் தமிழ்ப்பெருங்குடி மக்களை விழுங்குவதைப் போன்ற காட்சியமைப்புடன் வந்தனர் புதுவைக் கழகத்தினர்.

இன்னும் பல வித்தியாசமான ஏற்பாடுகளுடன் பின்னால், கழகத் தோழர்கள் அணிவகுத்திருந்தனர். 11 மணிக்கு ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை அடைந்ததும் வானோக்கி உயர்ந்திருந்த கம்பத்தில் எஸ்.முத்து கொடியேற்றி வைத்தார். 'திராவிட நாடு திராவிடருக்கே' என வேட்டுச் சத்தத்தோடு முழக்கம் முழங்கியது. கொலை வெறிக்குப் பலியான கழகத் தோழர்கள், ஆறுமுகம் பெயரில் பிரமாண்ட பந்தலும் மஜீத் பெயரில் அரங்கும் அமைக்கப் பட்டிருந்தது. பந்தலின் முகப்பு தென்னங்கீற்றால் கோட்டை வாயில் போல அமைக்கப் பட்டிருந்தது. அதன்மீது உதயசூரியனும் பீரங்கிகளும் அமைக்கப்பட்டிருந்தன. உச்சியில் கழகக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது. உள்ளே அண்ணாவின் உருவச்சிலை வைக்கப்பட்டிருந்தது.

நாகூர் ஹனிபாவின் இன்னிசை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, 11.30 மணிக்கு மாநாடு தொடங்கியது. கே.கே.நீலமேகம் மாநாட்டைத் திறந்துவைக்க, ஏ.கோவிந்தசாமி எம்.எல்.ஏ. வரவேற்புரை ஆற்றினார். தலைமை உரையாற்றிய எஸ்.முத்து, “தி.மு.கழகம் பொழுதுபோக்குக்காக ஒரு விடுதலை இயக்கத்தை எதிர்க்கவில்லை. எதிர்காலத்தில் சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க இருக்கிறது. அந்தச் சமுதாயத்தில் ஏழையும் இருக்க மாட்டான், பணக்காரனும் இருக்க மாட்டான். தொழிலாளியும் இருக்க மாட்டான், முதலாளியும் இருக்க மாட்டான்” என்றார். இரண்டு நாட்களிலும் எண்ணற்றோர் தனித்தனி தலைப்புகளில் பேசினர். அண்ணாவின் பேருரையுடன் மாநாடு முடிவுற்றது. 15 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

...கூட்டம் திரளும்

## வெளியேறும் முதலீடுகள்: கண் முன்னே சிதையும் இலக்கு!

'திராவிட மாடல் ஆட்சி'க்காலத்தில் தமிழ்நாட்டுடன் ஒப்பந்தம் செய்திருந்த, 'மசாகன் டாக் ஷிப் பில்டர்ஸ்' என்கிற நிறுவனம், தற்போது ஆந்திரப் பிரதேசத்துக்குச் செல்ல உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2025, செப்டம்பர் 19-ஆம் தேதி, 'மசாகான் டாக் ஷிப் நிறுவனம்' தமிழ்நாடு அரசின் முதலீட்டு அமைப்புடன் ஒப்பந்தம் செய்திருந்தது. தூத்துக்குடியில், உலகத் தரம் வாய்ந்த கப்பல் கட்டும் தொழிற்சாலையை அமைக்க, ரூ.15 ஆயிரம் கோடி முதலீடு செய்ய திட்டமிட்டிருந்தது. இதன் மூலம் 45 ஆயிரம் பேருக்கு நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும் என்கிற எதிர்பார்ப்பு இருந்தது.

அந்தத் திட்டம்தான், தற்போது ஆந்திராவுக்குச் செல்ல உள்ளது.

ஆந்திராவின் துகராஜபட்டினத்தில் ரூ.29 ஆயிரம் கோடி மதிப்பில் பெரிய கப்பல் கட்டும் தொழிற்சாலைத் திட்டத்தில், 'மசாகன் டாக் ஷிப் நிறுவனம்' முதலீடு செய்ய உள்ளது.

ஆட்சி மாற்றத்திற்குப் பிந்தைய தற்போதைய சூழலில், இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதில் ஏற்பட்டுள்ள சுணக்கம் காரணமாக, 'மசாகன் டாக் ஷிப் நிறுவனம்' தமிழ்நாட்டில் இருந்து வெளியேற உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

'திராவிட மாடல் அரசு' பெரு முயற்சிகளுக்குப் பின் கொண்டு வந்த முதலீட்டுத் திட்டங்களை, 'சோஃபா மாடல் ரீல்ஸ் ஆட்சி', ஏனோதானோவெனக் கையாண்டு, கை கழுவி வருகிறது.

கடந்த மே மாதம், பாதுகாப்புத் துறை தளவாடங்கள் சார்ந்து தமிழ்நாட்டின் ஓசூரில் அமைக்கத் திட்டமிட்டிருந்த 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டுத் திட்டம் ஆந்திராவுக்குச் சென்றது. தற்போது, 'மசாகன் டாக் ஷிப் நிறுவன'த்தின் முடிவும் தமிழ்நாட்டுக்கு இரட்டை அடியாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் பொருளாதாரம் மில்லியன் டாலர் என்கிற இலக்கு, நம் கண் முன்னே சிதைந்து வருவது காலத்தின் கொடுமை!

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

118

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




## நமக்கு வேண்டியதெல்லாம் மான உணர்ச்சி!

வரலாற்றில் சில உரைகள் நிலைத்து நிற்பவை. காலந்தோறும் பல்வேறு தருணங்களில் மீண்டும் மீண்டும் நினைவில் நிறுத்தி சிந்திக்க வேண்டியவை. அத்தகைய சிறப்புக்குரிய ஒன்று, 'தந்தை பெரியாரின் மரண சாசனம்' என்று அழைக்கப்படும் இறுதிப் பேருரை. 1973-ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று, அவர் இந்த உரையை சென்னை தியாகராய நகரில் தந்தை பெரியார் ஆற்றினார்.

ஒன்றரை மணி நேர உரையான இது, இரவு 10 மணி வரை நீண்டது. நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு திடலை அடைய இரவு 12 மணி ஆகிவிட்டது என்கிறார், இந்நூலுக்கு முன்னுரை வழங்கியிருக்கும் இன்றைய திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

1973-ஆம் ஆண்டே 'விடுதலை'யில் இந்த உரையின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் வெளியான நிலையில், பெரியார் ஆற்றிய முழு உரையும் இந்நூலில் எழுத்து வடிவம் பெற்றுள்ளது. இந்த உரை, பல வகையில் தனித்துவமானது. பெரியார் எதிர் காலத்தில் மேற்கொள்ளவிருந்த உரிமைப் போராட்டத்திற்கு மக்களைத் தயார் செய்யும் வகையில், இவ்வுரை அமைந்திருந்தது. மிகவும் நேரடியாக மக்களுக்குப் புரியும் மொழியில், நகைச்சுவை உணர்வுடன் இந்த உரையை அவர் மேற்கொண்டார்.

உரையின் நடுவே தனக்கு வலி ஏற்படவே, வலியால் துடித்தபடி, “ம்... ஆ... அம்மா.... அம்மா...” என்று அரற்றுகிறார். பின்னர் “... ம்.... ம்...” என்று தன்னையே ஆசுவாசப்படுத்திக் கொண்டு, மீண்டும் பேசத் தொடங்குகிறார்.

'தமிழர்கள் தன்மான உணர்வுடன் இருக்க வேண்டும்' என்பதைப் பல்வேறு உதாரணங்களுடன் அவர் எடுத்துரைக்கிறார். இங்குள்ள கடவுள், மதம் தொடங்கி அரசியலமைப்புச் சட்டம் வரை 97% தமிழர்களை இழிமக்கள் என்றே நடத்துவதை அவர் தீவிரமாகப் பிரச்சாரம் செய்கிறார். 'அதை மாற்ற வேண்டும்' என்கிறார், 'அந்த இழிநிலை ஒழிய, அறவழியில் போராட வேண்டும்' என்கிறார்.

இந்த உரையில், அறிவியல் கருத்துகளையும் குறிப்பாக, 'டெஸ்ட் டியூப் பேபி', 'அமெரிக்கர்கள் மேற்கொள்ளும் வான் வெளி ஆராய்ச்சி', 'உலகெங்கும் அதிகரித்து வரும் மனிதர்களின் சராசரி ஆயுள்', 'தொலைபேசிக் கருவி' உள்ளிட்டவை பற்றி எல்லாம் பேசுகிறார்.

பெரியாரின் இந்த உரையில் உள்ள சில பகுதிகள், பின்னாட்களில் நமது இன எதிரிகளால் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டதை முன்னுரையில் ஆசிரியர் அவர்கள் எடுத்துக்கூறி இருக்கிறார். மேலும் அந்த வழக்கில், நமக்கு சாதகமான தீர்ப்பைப் பெற எடுக்கப்பட்ட முயற்சிகளையும் இந்த உரையின் வரலாற்று முக்கியத்துவத்தையும் இந்த நூலின் முன்னுரை தெளிவுபடுத்துகிறது.

“தோழர்களே, இப்போது நமக்கு வேண்டியதெல்லாம் மான உணர்ச்சி! நமக்கு இருக்கிற இழிவு நீங்கணும். அப்புறம் மேலே போகலாம்; போகணும். மனுஷனுக்கு இருக்கிற உரிமை என்ன தெரியுமா? மனுஷனுக்கு இருக்கிற சக்தி, உரிமை” என்பதை, இந்த உரை முழுக்க அவர் வலியுறுத்துகிறார். உரை ஆற்றப்பட்டு, 53 ஆண்டுகளைக் கடந்திருந்தாலும் அதில் அவர் எட்ட நினைத்த லட்சியங்களை நாம் எட்டியதாகச் சொல்ல இயலவில்லை. இந்துத்துவம் கோலோச்சும் இக்காலகட்டத்தில், மீண்டும் 'பெரியாரின் மரண சாசனம்' என்று அழைக்கப்படும் இந்த இறுதிப் பேருரையை எடுத்து வாசித்துப் பரப்ப வேண்டிய தருணம் இது.

...வாசிப்போம்.

# ஃப்ளாஷ்பேக்



அஜயன் பாலா




## வாழ்வின் மறக்க முடியாத தருணம்...

2008- ஆம் ஆண்டு, 'தென் திசை பதிப்பகம்' வெளியிட்ட இந்த நூலான 'உலக சினிமா வரலாறு : மவுன யுகம்' தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் நுண்கலைப் பிரிவில் சிறந்த நூலுக்கான விருதைப் பெற்றது. அதற்கான பரிசளிப்பு விழா, 2009-ஆம் ஆண்டு, கலைவாணர் அரங்கில் அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. அன்றைய செய்தி மற்றும் தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி, விருது சான்றிதழை வழங்கினார். கலைஞர் அமர்ந்திருந்த மேடையில், நான் ஒரு எழுத்தாளனாக அங்கீகாரம் பெற்றேன் என்றால், அதைவிட உயர்ந்த தருணம் என் வாழ்வில் வேறு என்ன இருக்க முடியும். ஒரு எழுத்தாளனாக எனக்குக் கிடைத்த முதல் அங்கீகாரம் அது. அந்த விருதுபெற்ற நாளின் பரவசமும் மனக்கிளர்ச்சியும் இன்னமும் என் நினைவில் பசுமையாகவே இருக்கின்றன.

- இயக்குநர் அஜயன் பாலா,
சாலிகிராமம், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# கருவூலம்

## நெசவுத் தொழிலைக் காப்பாற்ற அரசு நிறுவனம்!

1969-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மூன்று மாதங்களுக்குள், தமிழ்நாட்டின் பல பஞ்சாலைகள் மூடப்பட்டு, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் சூழல் உருவானது. மூடப்பட்ட ஆலைகளை அரசே ஏற்று நடத்தும் நோக்கத்துடன், 'தமிழக நெசவாலைத் தொழிற் கழகம்' என்கிற நிறுவனத்தை உருவாக்கினார், கலைஞர். இந்த அரசு நிறுவனம், முதற்கட்டமாக ஐந்து ஆலைகளை ஏற்று நடத்தத் தொடங்கியது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900